## முதன்மை தாள் 7BTA5C1 - அறஇலக்கியம்

**அலகு : 1**

பழந்தமிழ்ச் சமூகம் விட்டுச் சென்ற கிடைத்தற்குரிய பெருஞ்செல்வமே திருக்குறள், சங்க இலக்கியங்களுக்குப் பிறகு தோன்றிய "நீதி இலக்கியங்கள்" வாழ்வியல் நெறியினை வகுத்தளித்த அற்புதப் பேழைகள் சாதி, இன, மொழி, நிற அடையாளங்களைத் தவிர்த்து, சமூக நல்லிணக்கம் பேணிய அற்புத விளக்கு. அந்த விளக்குகளில் தலை சிறந்த விளக்கே திருக்குறள்.

**"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து**
**வான் புகழ் கொண்ட தமிழ்நாடு" என்ற சிறப்பிற்குரியது.**

**அலகு : 2**

நான்கு அடிகளால் பாடப்பட்டதால் நாலடி என்னும் "ஆர்" என்னும் சிறப்பு விகுதியும் சேர்த்து நாலடியார் என்று அழைக்கப்படுகிறது. தனிமனித, சமூக வாழ்வியல் மற்றும் கூட்டுறவுகளை, விழுமியங்களை அழகுற எடுத்தியம்பும் நூல் நாலடியார். (400 வெண்பாக்களைக் கொண்டது)

**அலகு : 3**

பல அழகு மணிகளால் கோர்க்கப்பட்ட அணிபோல மூதறிருர்களின் உரையினைக் கோர்த்து தருவதே முதுமொழிக் காஞ்சி என்னும் நூல் ஆகும். ஆசிரியர்: மதுரைக் கூடலூர்கிழார், 100 பாடல்கள், குறள்தாழிசை, காலம்: கி.பி 5 ஆம் நூற்றாண்டு.

பழந்தமிழர்களின் மருத்துவ முறைகளில் உடல் நோயைப் போக்க கண்டங்கத்திரிவேர், சிறவழுதுணைவேர், சிறமல்லிவேர், பெருமர்லிவேர், நெருஞ்சிவேர் ஆகிய ஐந்து வேர்களைச் சேர்நத்து மருந்தாக்கி உடல் நோயினைப் போக்குவதைப்போல் ஒவ்வொரு பாடலிலும் ஐந்து அறக்கருத்துக்கள் இடம்பெறுவதால் இந்நூல் சிறுபஞ்சமூலம் என்று அழைக்கப்படுகிறது. ஆசிரியர், காரியாசான், பாடல்கள் : 102.
பா: வெண்பா. காலம் : கி.பி 5 ஆம் நூற்றாண்டு.

மூது+உரை: மூதுரை. மிகப்பழமையான அறக்கருத்துக்களைக் கொண்டிருப்பதால் மூதுரை என்று அழைக்கப்படுகிறது. ஆசிரியர்: ஔவையார், சி.பெ : வாக்குண்டம் (நல்ல மனம் உண்டாம்) பாடல்கள் : 30 வெண்பா நேரிசை வெண்பா.

**அலகு : 4**

தமிழ் மொழியில் பிற்காலத்தில் தோன்றிய நீதி நூல்களுள் வெற்றிவேற்கையும் ஒன்று. ஆசிரியர் : அதிவீராம பாண்டியர். வெண்பா வகை. பாடல்கள் :82 சி.பெ: நறுந்தொகை எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான் என்ற வரியில் இருந்து பாடல் ஆரம்பமாகிறது.

**அலகு : 5**

தனி மனிதனுக்குரிய நீதிகளை எடுத்துரைத்து அவர்களின் ஆளுமையை வளர்த்தெடுப்பதே இந்நூலின் முதன்மையான நோக்கமாகும். ஆசிரியர்: குமரகுருபரர், காலம் : கி.பி 17-ம் நூற்றாண்டு, பாடல்கள் 102. பா: வெண்பா (தனி மனித ஆளுமையைப் பேசும் நூல்)

நன்மை+நெறி: நன்னெறி, மனித வாழ்க்கைக்கு நன்மைகளைத்தரும் நல்லொழுக்க நெறியினைத் தொகுத்துத் தரும் நூல். ஆசிரியர்: துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள். பா: 40 நேரிசை வெண்பா, "மகடூஉ முன்னிலை உடைய நீதிநூல". சமயம்: சைவம்.

**பார்வை நூல் :** **சங்க இலக்கியம்,**
**கழக வெளியீடு,**
**மதுரை.**